மேலும், இன்றைய (9–1–2020) நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள அவைமுன் வைக்கப்பெறும் ஏடுகளில் உள்ள 2 அறிவிக்கைகள், 5 ஆண்டறிக்கைகள்/தணிக்கை அறிக்கைகள் மற்றும் ஏனைய தாள் ஒன்று ஆகியவற்றின் மென்பொருள் நகல் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மின்னஞ்சல்மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்பதையும் பேரவையின் அனுமதியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது உறுப்பினர்களால் அளிக்கப்பட்டு, அனுமதிக்கப்பட்ட திருத்தங்கள் தொகுத்து தயார் செய்யப்பட்டு, அவற்றின் மென்பொருள் நகல் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மின்னஞ்சல்மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்பதையும் பேரவையின் அனுமதியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மேற்குறிப்பிட்ட உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல்கள்,குழுக்களின் அறிக்கைகள்,பேரவைமுன் வைக்கப்பெற்ற அறிவிக்கைகள், ஆண்டறிக்கைகள்/தணிக்கை அறிக்கைகள், ஏனைய தாள்கள் மற்றும் ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான திருத்தங்கள் ஆகியவற்றின் தலா 5 பிரதிகள் மாண்புமிகு உறுப்பினர்களின் பார்வைக்காக சட்டமன்றப் பேரவை நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளன.

முற்பகல் 11–30

5. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கை அளித்தல். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2018–2020 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 91 முதல் 104 வரையிலான 14 அறிக்கைகளை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கை அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. S. செம்மலை அவர்கள்.

2020 ஜனவரி 9]

திரு. S. செம்மலை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் மேலான அனுமதியோடு, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2018–2020 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் 94 முதல் 103 வரையிலான 10 அறிக்கைகளை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.*

(இ) சட்ட விதிகள் ஆய்வுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் அறிக்கை அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.*

திரு. சு. ரவி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அருளாசியோடு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.*

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2018–2020 ஆம் ஆண்டிற்கான சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் 7–வது அறிக்கையை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஈ) அரசு உறுதிமொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கை அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.எஸ். இன்பதுரை அவர்கள்.*

திரு. ஐ.எஸ். இன்பதுரை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய இருபெரும் தெய்வங்களாகிய புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மற்றும் புரட்சித் தலைவி அம்மா ஆகிய இருவருடைய ஆன்மாவை வணங்குகிறேன். எங்களை வழிநடத்திச் செல்கிற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடியார் அவர்களை தாழ்பணிந்து வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் மேலான அனுமதியோடு, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2018–2020 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் 75 மற்றும் 76 ஆகிய 2 அறிக்கைகளை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

[2020 ஜனவரி 9

(உ) மனுக்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மனுக்கள் குழுவின் அறிக்கை அளித்தல். மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா திரு. சு. ராஜேந்திரன் அவர்கள்.

திரு. சு. ராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அருமை அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்களுடைய தலைமையிலும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களுடைய துணையோடும் நடைபெறுகின்ற இந்த நல்லரசை வாழ்த்துகிறேன். தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மனுக்கள் குழுவின் தலைவர் என்னும் முறையில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2018–2020 ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் 7 முதல் 12 வரையிலான 6 அறிக்கைகளை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு சொத்து உரிமையாளர்கள் மற்றும் வாடகைதாரர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் முறைப்படுத்துதல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2020

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு சொத்து உரிமையாளர்கள் மற்றும் வாடகைதாரர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் முறைப்படுத்துதல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு சொத்து உரிமையாளர்கள் மற்றும் வாடகைதாரர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் முறைப்படுத்துதல் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.